

இலங்கை பேராதனைப் பல்கலைக்கழக
முன்னாள் சமஸ்கிருத விரிவுரையாளரும்
யாழ். பல்கலைக்கழக
முன்னாள் இந்து நாகரிகத்துறைத் தலைவரும்
இராமநாதன் நுண்கலைப்பீட முன்னாள் தலைவரும்
லண்டன் வேதாகம சபாவின் போஷகருமான
பேராசிரியர் கா. கைலாசநாத குருக்களின்
அன்பு மனைவி

# திரிபுரசுந்தரி அம்மாள்

இறைவனடி சேர்ந்தமை குறித்து
வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**04.11.99**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை



ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மாள் கைலாசநாத குருக்கள்

தோற்றம்: 12.01.1928 மறைவு: 04.10.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

இலங்கைப் பேராதனை பல்கலைக்கழக
முன்னாள் சமஸ்கிருத விரிவுரையாளரும்
யாழ். பல்கலைக்கழக
முன்னாள் இந்து நாகரிகத்துறைத் தலைவரும்
இராமநாதன் நுண்கலைப்பீட முன்னாள் தலைவரும்
லண்டன் வேதாகம சபாவின் போஷகருமான
காச்யப கோத்ரம் பேராசிரியர் கா கைலாசநாத குருக்களின்
அன்பு மனைவி

# திரிபுரசுந்தரி அம்மாள்


இறைவனடி சேர்ந்தமை குறித்து
வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

10 Meadow Mead
Radlett
Herts WD7 8ES
UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா தேவி

நவராத்திரி சமயத்தில் சிம்மாசனத்தில் கொலுவீற்றிருக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# श्री वडिवाम्बिका पञ्चरत्नम्

# Srī Vadivāmbikā Paṅćaratnam

# ஸ்ரீ வடிவாம்பிகா பஞ்சரத்னம்

பேராசிரியர் கா கைலாசநாத குருக்கள்

1. श्री विद्यामरुणां परां भगवतीं जाज्वल्यमानप्रभां
लावण्येन निरन्तरं स्तृतवपुः शोभाविशेषान्विताम् ।
मन्दस्मेर वशीकृतत्रिभुवनां भास्वत्कपोलद्वयां
तां देवीं वडिवाम्बिकां प्रतिदिनं वन्दे जगन्मातरम् ॥

Śrī vidyāmaruṇām parām bhagavatīm jājvalyamānaprabhām
Lāvaṇyena nirantaram stṛtavapuh śobhāviśeshanvatām |
Mandasmera vaśīkṛta tribhuvanām bhāsvatkapoladvayām
Tām devīm Vadivāmbikām pratidinam vande jaganmātaram ||

ஸ்ரீவித்யாமருணாம் பராம் பகவதீம் ஜாஜ்வலயமானப்ரபாம்
லாவண்யயேந நிரந்தரம் ஸ்த்ருதவபுச்சோபா விசேஷான்விதாம் |
மந்தஸ்மேரவசீக்ருத த்ரிபுவனாம் பாஸ்வத் கபோல த்வயாம்
தாம் தேவீம் வடிவாம்பிகாம் ப்ரதிதினம் வந்தே ஜகன்மாதரம் ||

[ஸ்ரீவித்தையினளை, இளஞ்சிகப்பு நிறத்தாளை, பகவதியை, பெருமாட்டியை, பளபளக்கும் கிரண ஒளிவீசி நிற்பாளை, இடையீடின்றித் திருமேனி எங்கணும் வாரி இறைத்த உடல் வனப்பு மிக்காளை, புன்சிரிப்பால் மூவுலகங்களைத் தன் வயமீர்த்தவளை மின்னி ஒளிவீசும் இருகன்னங்கள் வாய்த்தாளை வடிவாம்பிகையை உலகன்னையை அநுதினமும் போற்றி வணங்குகிறேன்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. क्षिप्रं भक्तवरप्रसादनपरां कारुण्यपूर्णेक्षणां
नासामौक्तिभासुरां सुचुबुकां मांगल्यभूषोज्वलाम्।
भङ्गानां त्रितयेन शोभिततनुं सौन्दर्यमूर्तां शुभां
तां देवीं वडिवाम्बिकां प्रतिदिनं वन्दे जगन्मातरम्॥

Kṣipram bhaktavaraprasādanaparām kāruṇyapūrṇekṣaṇām
Nāsāmauktibhāsurām sućubukām māṅgalyabhūṣojvalām |
Bhaṅgānām tritayena śobhitatanum saundaryamūrtām śubhām
Tām devīm Vadivāmbikām pratidinam vande jaganmātaram ||

க்ஷிப்ரம் பக்த வரப்பிரசாதன பராம் காருண்ய பூர்ணேக்ஷணாம்
நாசா மௌக்திக பாசுராம் சுசுபுகாம் மாங்கல்ய பூஷோஜ்வலாம் |
பங்கனாம் த்ரிதயேந சோபித தநும் சௌந்தர்ய மூர்த்தாம் சுபாம்
தாம் தேவீம் வடிவாம்பிகாம் ப்ரதிதினம் வந்தே ஜகன்மாதரம் ||

[விரைந்து அடியார்க்கு வரம் தருவாளை, கருணை வழியும் இரு கண் களுடையவளை, மூக்குத்தி மின்ன விளங்குபவளை, அழகு பொலிந்து கூம்பிய நாடியை உடையாளை, திருமாங்கல்யம் விளங்கும் நாணை அணிந்தவளை, மூன்று வளைவுகள் எனும் திரிபங்க நெளிவுகள் பொலி- யும் திருமேனி வனப்பு மிக்காளை, அழகைத் திரட்டி உருவாக்கி வடிவமைக்கப் பெற்றாளை, ஒளிவீசி நிற்பாளை, உலகன்னை வடிவாம் பிகையை அநுதினமும் போற்றி வணங்குகிறேன்.]

3. सिन्दूरेण सहस्रनामनुतिभिर्भूदेव बृन्दार्चितां
सर्वाभीष्टफलोपलब्धिमुदितैर्भक्तैः कृतज्ञापरैः।
एकीभूय विभिन्नदर्शनपरैर्भक्त्या समाराधितां
तां देवीं वडिवाम्बिकां प्रतिदिनं वन्दे जगन्मातरम्॥

Sindūreṇa sahasranāmanutibhirbhūdeva bṛndārćitām
Sarvābhīṣṭaphalopalabdhi muditairbhaktaih kṛtajñāparaih |
Ekībhūya vibhinnadarśanaparairbhaktyā samārādhitām
Tām devīm Vadivāmbikām pratidinam vande jaganmātaram ||


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துாரேண சஹஸ்ரநாம நுதிபிர் பூதேவ ப்ருந்தார்ச்சிதாம்
சர்வாபீஷ்டபலோபலப்தி முதிதைர்பக்தை: க்ருதஜ்ஞாபரை: |
ஏகிபூய விபின்ன தர்சன பரைர் பக்த்யா சமாராதிதாம்
தாம் தேவீம் வடிவாம்பிகாம் ப்ரதிதினம் வந்தே ஜகன்மாதரம் ||

[மஞ்சள் தோய்ந்த குங்குமத்தினால், ஆயிரம் திருநாமம் தனித்தனி கூறும் துதிகளால், அந்தணர் குழாத்தினால், அருச்சிக்கப் பெறுபவளை தத்தம் விருப்பம் கைவரப்பெற்றுக் களிப்பு மிகுதியுற்ற பரசமயத்தவர்கள் (ஆண்டுத் திருவிழாவின் போது) ஒருங்கு குழுமி பக்தியுடன் வழிபடப் பெறுபவளை, உலகன்னை வடிவாம்பிகையை அநுதினமும் போற்றி வணங்குகிறேன்.]

4. सायाह्ने नवरात्रिषु प्रतिनिशं सिंहासनेशोभने
राज्ञींतामुपविश्य शासनपरां श्रीविद्ययोपासिताम् ।
प्रातः कल्पितमज्जनां सुविहितैः स्नानोचितैर्व वस्तुभिः
तां देवीं वडिवाम्बिकां प्रतिदिनं वन्दे जगन्मातरम् ॥

Sāyāhne navarātriṣu pratiniśam simhāsane śobhane
Rāñtīmtāmupaviśya śāsanaparām śrīvidyayopāsitām |
prātah kalpitamajjanām suvihitaih snānoćitairvastubhih
Tām devīm Vadivāmbikām pratidinam vande jaganmātaram ||

சாயாஹ்நே நவராத்திரிஷுப்ரதிதினம் சிம்ஹாஸநேசோபனே
ராஜ்ஞீம் தாம் உபவிஸ்ய சாஸனநபராம் ஸ்ரீவித்ய யோபாஸிதாம் |
ப்ராத: கல்பிதமஜ்ஜநாம் ஸுவிஹிதை: ஸ்நாநோசிதைர் வஸ்துபி:
தாம் தேவீம் வடிவாம்பிகாம் ப்ரதிதினம் வந்தே ஜகன்மாதரம் ||

[நவராத்திரி தினங்களில் காலைதோறும், விதிப்படி திருமஞ்சனத்துக்குரிய பொருள்களால் வரிசையாக நீராட்டப் பெறுபவளை, மாலை வேளைகளில் அழகு பொலியும் சிம்மாசனத்தில் கொலுவீற்றிருந்து பக்திபூர்வமாக ஸ்ரீவித்யா மந்திரங்களால் உபாசிக்கப் பெறுபவளை, உலகன்னை வடிவாம்பிகையை அநுதினமும் போற்றி வணங்குகிறேன்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. विघ्नेशादिसमस्तदैवतगणैश्चण्डेश्वरांतैर्वृतां
श्रीचक्राश्रितगर्भगेहनिलये मुन्नेशनाथंश्रिताम् ।
श्रीमुन्नेश्वरमध्यगां शिवयुतां शक्त्यैक्यतत्वात्मिकां
तां देवीं वडिवाम्बिकां प्रतिदिनं वन्दे जगन्मातरम् ॥

Vighneśādisamastadaivataganaiśćaṇḍeśvarāntairvṛtām
Śrīćakrāśritagarbhagehanilaye munneśanātham śritām |
Śrīmunneśvara madhyagām śivayutām śaktyaikyatatvātmikām
Tām devīm Vadivāmbikām pratidinam vande jaganmātaram ||

விக்நேசாதி சமஸ்த தைவகணைஸ் சண்டேச்வராம்தைர்விதாம்
ஸ்ரீசக்ராச்ரித கர்ப்பகேஹநிலயே முன்னேசநாதம் ச்ரிதாம் |
ஸ்ரீமுன்னேச்வர மதயகாம் சிவயுதாம் சக்த்யைக்ய தத்வாத்மிகாம்
தாம் தேவீம் வடிவாம்பிகாம் ப்ரதிதினம் வந்தே ஜகன்மாதரம் ||

[விக்கினேசுவரர் முதல் சண்டேசுவரர் ஈறாக எல்லாத் தெய்வங்களும் புடைசூழ வீற்றிருப்பவளை, ஸ்ரீசக்கர மேருயந்திரம் விளங்கும் கருவறையின் நடுவண் முன்னைநாதரை மருவி நிற்பாளை, ஸ்ரீமுன்னேசுவர கிராமத்தின் மத்தியில் உறைபவளை, சிவனுடன் ஒன்றிணைந்தவளை, சிவசக்தி ஐக்யத்துவத்தை தன் அமைப்பால் உணர்த்தி நிற்பவளை, உலகன்னை வடிவாம்பிகையை அநுதினமும் போற்றி வணங்குகிறேன்.]

शुभमस्तु

Śubhamastu

சுபமஸ்து

---

*முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா தேவி பேரிலான இந்த ஐந்து ஸ்லோகங்களும், 1971ஆம்ஆண்டில் இயற்றப்பட்டு, நவராத்திரி இறுதி நாளன்று பக்தியுடன் சமர்ப்பிக்கப்பட்டன.*

*These five Slokas on Munnesawaram Sri Vadivambika Devi were composed in 1971 and submitted on the final day of the Navaratri with due devotion.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மாள் கைலாசநாத குருக்களுக்கு கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளின் இதயாஞ்சலிகள்

*கார்யேஷு தாஸீ கரணேஷு மந்த்ரி*
*ரூபேச லக்ஷ்மி க்ஷமயா தரித்ரீ*
*புக்தெள ச மாதா சயனேஷு வேச்யா*
*ஷட்கர்மயுக்தா குலதர்ம பத்நீ*

என்ற நீதி சுலோகத்திற்கு அமைய ஆறு பண்புகள் ஒருங்கு பொருந்திய என் மனைவி வீட்டுவேலைகள் செய்வதில் அடிமையாகவும், புத்திமதிகள் கூறுவதில் மந்திரியாகவும், அழகுப்பொலிவில் லக்ஷ்மி போன்றும், பொறுமையில் பூமியை நிகர்த்தும், உணவு வழங்குவதில் தாயாகியும், படுக்கையில் வேசிபோன்றும் ஆறு உயர்ந்த இயல்புகள் வாய்ந்தவளாக, குலதர்மபத்தினியாக வாழ்க்கை முழுவதும் அவ்வப்போது விளங்கியதனைக் கண்டு பெருமை உற்றேன்.

1940ஆம் ஆண்டு எங்கள் வாழ்க்கை ஆரம்பமாயிற்று. 60 ஆண்டுகள் (2000ஆம் ஆண்டில்) நிறைவதற்கு 4 மாதங்கள் முன்னரே வாழ்க்கையை நிறைவு செய்து கொண்டார்.

வாழ்க்கையில் இறுதிச் சில மாதங்களாக என் மனைவி என்ற நிலையினின்றும்நீங்கி என் தாயாக மாறி என் உணவு, உடை, நடை ஆகியவற்றை முறையாக ஒழுங்கு செய்து 79 வயது நடைபெறும் என் வாழ்க்கையைச் சீராக்கி அமைத்தார்.

இறுதி 10, 12 மாதங்கள் இவரது வாழ்க்கை முற்றிலும் தெய்வீகமணம் வீசிற்று. எல்லோரிடமும் காட்டிவந்த தாயன்பு மேலும் விரிவடைந்தது. இரவில் ஒருசில மணிநேரம் நித்திரை, உணவு குறைவு, எளிய உடை, விடிய ஐந்துமணிக்கே சுறுசுறுப்புடன் இயங்கி விஷ்ணு சகஸ்ர-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமம், லலிதா சகஸ்ரநாமம், பஜகோவிந்தம், சுப்ரபாதம், ஸ்ரீராமர் அநுமார் தோத்திரங்களைக் கேட்டல், பொருள்களை (தண்ணீரைத்தானும்) வீணாக் காது பேணிச் சமைத்தல், பகல் உணவின் பின் உறங்காது காஞ்சிப் பெரியவரின் நூல்களை, தேவி, விஷ்ணு பாகவதங்களையும் வாசித்தல், என சதா ஈசுவர ஸ்மரணை என்பவற்றில் பொழுது போய்க்கொண்டு இருந்தது. ஆஸ்தமாவின் கொடுமையான தாக்குதலால் மூச்சுத் திணறிய வேளைகளிலும் 'அம்பிகே!, நாராயணா!' என்ற நாம உச்சாரணம். இறுதி மூச்சுப் பிரியும் தறுவாயிலும் (ஐயோ! தாங்கமுடியவில்லையே என அழாது) தெய்வீக நாமங்களையே உரக்க ஒலித்துக்கொண்டு என் கால்களைப் பற்றி கண்ணில் ஒற்றிக்கொண்டு அம்புலன்ஸ் வண்டியில் மூத்த குழந்தை கமலா-வுடன் சென்ற காட்சி என் மனதில் ஆழப்பதிந்து விட்டது.

ஆஸ்பத்திரியில் அரைமணிநேரமாக நிகழ்ந்த சிகிச்சை பயன்தராது அவரது உயிர் பிரிந்து அம்பிகையின் திருவடிநிழலை அடைந்து விட்டது. தெய்வீக வாழ்க்கை நிகழ்ச்சிகளால் செப்பனிடப்பட்ட இப்பேறு அவருக்கே உரிய உயர் பேறு என்று தெளிவுற்று அம்பிகையின் பொற்பாதம் வணங்கி அமைதி உறுகிறேன்.

— பேராசிரியர் கா கைலாசநாத குருக்கள்
(கணவர்)

---

ஸ்ரீமாதா, கருணாரஸ ஸாகரா, ஸுவாஸிந்யர்ச்சனப்ரீதா (சிறந்த தாய், கருணைக் கடல், சுவாஸினீகளை அர்ச்சிப்பதால் - சுவாஸினீகள் அர்ச்சிப்பதால் - மகிழ்ச்சியடைபவள்) என்பன அம்பிகைக்குரிய பெயர்களுள் முக்கியமானவை. இப்பெயர்கள் யாவற்றுக்கும் இலக்கணமாக தாயன்புமிக்கவராகவும், கருணைமிகுந்த உபசரிப்பு பெருகியவராகவும், சுவாஸினீகளை உபசரிப்பதால் மகிழ்வடைந்தவளுமான அன்னை லலிதாம்பிகை எமது அன்னையைத் தன்னுள் ஒரு வடிவமாக ஆக்கிக் கொண்டாள். அம்மா தீர்க்க சுமங்கலி ஆனார். இவற்றினைக் கொண்டு நான் மகிழ்வடைகிறேன்.

உறவினால் அத்தை. அழைப்பினால் அம்மா. எழுத்தினால் பாட்டி. இவ்விதமாக சிறுவயது முதல் அம்மாவின் அரவணைப்பில் வாழ்ந்த நான் பிரிவினால் மனம் உருகி நிற்கின்றேன்.

பிறவியின் இறுதிப் பயனே ஸ்ரீவித்யோபாஸனை என்பதனை உணர்ந்து விஷ்ணுவின் வடிவமான குருவாயூரப்பனை கோபாலசுந்தரீ ஆகவும், நல்லூரில் கமலாம்பிகையாகவும், முன்னேஸ்வரத்தில் வடிவாம்பிகையாகவும் வழிபட்டு வந்த அம்மா இறவாநிலையை அடைந்துள்ளார்கள் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் பிரிவு சொல்லினால் வரையறுக்க முடியாதது. உணர்வினால் வெளிப்படுத்தப்படுவது.

அம்மா தேவியின் பாதாரவிந்தங்களில் இருந்து என்றும் எமக்கு ஆசீர்வதிப்பார்கள் என உறுதியோடு நமஸ்காரம் செய்கின்றேன்.

ச பத்மநாபன்
நல்லூர்
(அன்புப் பேரன்)

எங்கள் அன்புக்குரிய அம்மா அவர்களது பிரிவு சொல்லொணாத்துயரத்தைத் தந்துள்ளது.

உள்ளத்திலும் சொல்லிலும் செயலிலும் ஒருமித்த தன்மையுடன் வாழ்ந்து எல்லோருக்கும் நல்லதையே செய்து தர்மத்தின் வழி வாழ்ந்து காட்டியவர் எங்கள் அம்மா.

கீதையில் கூறப்பட்டபடி 'சமத்துவம் யோக உச்யதே' என்ற வார்த்தைக்கு இணங்க எல்லா வேளைகளிலும் தளராத மன உறுதியுடன் பெரிய ஆலமரம்போல இருந்து எல்லோரையும் அன்பாலரவணைத்து அன்னமிட்டு அவரவர் குறிப்பறிந்து காரியங்களைச் செய்து எல்லோரும் வாழ வழி சமைத்தவர் எங்கள் அம்மா.

சிறுவனாக இருந்த நாள் முதல் எனது உடல், உள ஆரோக்கியத்திலும் மகிழ்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டு உணவளித்து புத்திமதிகள் கூறி வளர்த்த அம்மா தூர இருந்த வேளைகளிலும் வாஞ்சையுடன் உனது குரலைக் கேட்க சந்தோஷமாயிருக்கு என முதலில் கூறி குசலம் விசாரித்து புத்திமதிகள் கூறி வழிகாட்டியவர்.

அன்பின் வடிவம், தியாகத்தின் வடிவம், அன்னபூரணியின் மறுவடிவமான எங்கள் அம்மா, 'த்யாகேன கே அம்ருதத்வமானது' என்ற உபநிஷட வார்த்தைக்கு ஒப்ப தெய்வீகத்தன்மை பொருந்திய மேலான நிலையடைந்த எங்கள் அம்மா எப்போதும் எங்களை ஆசீர்வதித்து எம்முள்ளிருந்து வழிநடத்துவார்கள்.

ஓம் சாந்தி.

துயருற்ற மனதோடு
ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா
விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்
(அன்புப் பேறாமகன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உங்களது ஆசைக் குரலை இனி நான் எப்போது கேட்பேன்? எனக்கு இனி அம்மா இல்லையே. மனதிற்கு அமைதி இல்லாதபோது உங்களோடு பேசுவேன். உங்களது ஆசைக் குரல் எனக்கு ஆறுதல் தரும். இனி நான் யாரிடம் பேசுவேன். அம்மா என்னைத் தவிக்கவிட்டுப் போய்விட்டீர்களே!

எல்லோரும் சந்தோஷமாக இருக்கத் தனது வாழ்வை அர்ப்பணித்த தாயே உனது பாசக் குரலை இனி நான் எப்போது கேட்பேன்?

உனது அன்புக் கரங்களால் உணவூட்டிய தாயே, சிறு வயதில் எனது குறும்புத்தனங்களால் கோபப்படுவாய். மறுகணமே உனது பாசக் கரங்களால் அணைத்து முத்தமிடுவாய். அந்தத் தாய் அணைப்பு இனி எனக்கு எப்போது கிடைக்கும்?

சிறு வயதில் கண்டியில் நவராத்திரித் தினங்களில், நல்லூர் சென்றிருக்கும் உனைப் பிரிந்து அழுதிடும் நான், இவ்வருட நவராத்திரி பூஜை ஆரம்ப தினத்தன்று எனது குடும்பத்துடன் உனைப் பார்க்க வந்துள்ளேன். உனது ஆசைக் குரலால் 'ஸ்ரீ' என்று என்னைக் கூப்பிடுவாயா?

காஞ்சி மாமுனியின் 'தெய்வத்தின் குரல்' என்ற உபந்யாசங்களை எனது அன்பு மனைவி வாங்கி வந்ததும், அதனை வாசித்து அறிந்தேன் தெய்வத்தின் அருள் வாக்குகளை. அந்த தெய்வ வாக்குகளின் விளக்கம் தந்த என் அன்னையே உன்னை இனி நான் எங்கு காண்பேன்?

யாவரது இதயத்திலும் இருப்பிடம் கொண்ட என் அன்னையே, தாயே திரிபுரசுந்தரி உனது திருப்பாதங்களை நான் வணங்குகின்றேன், குடும்பத்துடன் ஏங்குகிறேன் உனது ஆசீர்வாதத்திற்கு.

இறுதியாக இதயநோய் மிகுந்து இதயம் தாக்கப்பட்டுத் தாங்கமுடியாத வலியினால் துடிக்கும்பொழுதுகூட வேறு வார்த்தைகள் எதுவுமின்றி 'நாராயணா, நாராயணா' என்று எந்த தெய்வத்தைக் கூவி அழைத்தாயோ, அந்த நாராயணருக்கே

*காயேன வாசா மனஸேந்த்ரியைர்வா*
*புத்த்யாத்மநாவா ப்ரக்ருதே ஸ்வபாவாத்*
*கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை*
*நாராயணாயேதி ஸமர்ப்பயாமி*

என்று பிரார்த்தித்து இவ்வஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றேன்.

— ஸ்ரீதரன் (மகன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர*
*ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர*

நடமாடும் தெய்வமாம் காஞ்சி மாமுனிவரின் பாதங்களைத் தானும் பற்றி என்னையும் 'தெய்வத்தின் குரல்' படிக்கவைத்து, அம்பாள் பாதங்களைக் கெட்டியாகப் பற்றி தனக்கு உள்ள உறுதி நெஞ்சம், கடமைகளைக் கண்ணும் கருத்துமாக நிறைவேற்ற வேண்டும் - முக்கியமாகப் பதியின் நலனில் அக்கறைகொள்ள வேண்டும், அவர் சொன்னால் அதற்கு மறுவார்த்தை இல்லை - என்ற எண்ணத்தை மனதில் புகுத்தி இல்லற வாழ்க்கையை சிறக்க வைத்தவளே!

என்ன பெருந்தவம் நான் செய்ததறியேனே, என்னைக் குழந்தையாகப் பெற்று இவ்வுலகிற்கு வர வைத்தவளே! நடமாடும் தெய்வமாய் எல்லாக் கஷ்டங்களையும் நீக்கி வைத்தவளே அம்மா!!

ஏன் அம்மா, அப்பாவைத் தவிக்க விட்டுப் போனீர்கள்?

அண்டியவருக்கு அன்னையாய், கண்டவர்க்குக் கண்ணனைப்போல் ஆசானாய் இருந்த படிக்காத மேதையே, பேரப்பிள்ளைகள் சேர்ந்து இருக்க வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றி எங்கே அம்மா போய்விட்டீர்கள்? அம்பாளுடன் எங்களைக் கண்ட நீங்கள் நிச்சயமாக எங்களை ஆசீர்வதித்து நாங்களும் உங்களைப்போல் குணாதிசயங்கள்கொண்டு வாழ வைப்பீர்கள்.

'முந்தைப் பிறவியில் பெற்ற பயனோ' உன்னைத் தாயாகப் பெற்று இவ்வுலகில் ஜனித்து நான் எல்லாத் திறமைகளையும் பெற வேண்டும் என்பது? உங்கள் விருப்பம்போல் நான் இப்போது நல்ல கெட்டிக்காரியாக இருக்கிறேன் என்று சொல்ல வந்துள்ளேன்.

உங்கள் எண்ணங்களில் என் மனது தவித்தாலும் நீங்கள் அம்பிகையின் பாதங்களில் இருந்து என்னைப் பார்ப்பீர்கள் என்ற திடமனத்துடன் வாழ்வேன். உதவி செய்யும் கரங்கள், பிரார்த்தனை செய்யும் உதடுகளை விடப் புனிதமானது என்பதைத் தன் செயலால் மற்றவர்கள் மனதில் பதிய வைத்துவிட்டு அம்பாளின் பாதங்களைப் பற்றியவளே, அப்பாவை மனம் நோகாமல் பார்த்து உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

— கௌரி (மகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்கும் எவையும் எரியுறு நீர் போல் ஏகம் தங்குமவன் தானே தனி*

இது உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயனாகும். இக்குறள் இறைவன் ஆன்மாக்களுடன் நீரில் சூடு இருப்பதுபோல எங்கும் வியாபித்திருக்கும் கடவுளின் கருணையைக் குறிக்கிறது. இங்கு இறைவனின் கருணைக்கு உவமை சொல்லப்பட்டிருப்பதுபோல் எங்கும் எவையும் எரியுறு நீர் போல் ஏகம் தன்னை அம்மாவென அழைத்த அனைவரின் மனதிலும் தனது கருணையினைப் பொழிந்து தன் தனித்தன்மையினைக் காட்டினார்.

*தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி*
*பின்னலிரான் எங்கள் பிரான்* — திருவருட்பயன்

அம்மா தன் அபிலாஷைகள் நடவடிக்கைகள் யாவற்றிலும் எப்படி இறைவன் சக்தியுடன் பிணைந்திருக்கின்றானோ அவ்வாறே அப்பாவின் ஆசியுடனேயே நடைமுறைப்படுத்தினார்.

*தெய்வம் தொழாள் கொழுநற் தொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை* — குறள்

இது கற்பின் சிறப்பைப் பற்றி வள்ளுவர் எடுத்தியம்பிய கூற்று. இதற்கு நாம் கண்ட வரைவிலக்கணம் அம்மாவின் வாழ்க்கை முறை. ஈற்றில் காலன் அழைத்த வேளையில்கூட அப்பாவின் கால்களைப் பற்றிய பின்பே எம்மிடமிருந்து விடைபெற்றார்.

'அண்டைப்பிறவியில் நுண்டைப்பெருக்கம் நூற்றொரு கோடியில் மேற் படவிருந்தன' என்று மணிவாசகர் அண்ட சராசரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அக்கூற்றுக்கிணையாகவே அம்மாவின் கருணையுள்ளம் அதனைவிட பன்மடங்கு விரிந்து நிற்கின்றது.

'சோழவளநாடு சோறுடைத்து' என்பது ஆன்றோர் வாக்கு. அம்மாவின் விருந்தோம்பல் பண்பினை நோக்கினால் அம்மாவின் கை சோறுடைத்து என்று கூறினால் அது மிகையாகாது.

*அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் இந்நான்கும்*
*இழுக்காது இயன்ற தறம்* — குறள்

இக்குறளினை வள்ளுவர் அம்மாவின் அறநெறிக் கொள்கையினை முன்னோக்கியே எடுத்தியம்பினாரோ நாமறியோம். ஒருகன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டுமாறு யேசு கூறினார். ஆனால் எமது அன்னையோ அறைந்த கை நொந்து விட்டதோ நொடிந்து விட்டதோ என்று பதறுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் வாழ்க்கைச் சிறப்புகளை எழுதுவதற்கு இடமும் போதாது. நாளும் போதாது. இத்துயர் சூழ்நிலையிலே எழுதக் கூடியவைதான் மேலே எழுதப்பட்டுள்ளன. ஆதாரம் இல்லாததோ நாம் அனுபவியாததோ எழுதப் படவில்லை. நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும். அதுபோல் எமது வாழ்வில் அம்மாவின் இழப்பின் அருமை இதுவரை தெரியவில்லை. இனித் தான் தெரியும். எப்படித்தான் தாங்கப் போகின்றோமோ நாம் அறியோம்.

— அம்மாவின் பிள்ளைகள்

மார்கழி மாதம் உத்திர நட்சத்திரத்தில் 1928ஆம் ஆண்டு எங்கள் அம்மா இம்மண்ணில் அவதரித்தார். பத்து வயதினிலே தம் தாயைப் பறிகொடுத்து தனது பன்னிரண்டாம் வயதில் எங்கள் அப்பாவைத் திருமணம் செய்தார். அந்த நாள் தொடக்கம் தன்னை ஓர் அம்மாவாகப் பாவனை செய்து எல்லோரையும் பராமரிக்க ஆரம்பித்தார்.

மற்றவர்கள் ஏச்சுப் பேச்சைத் துச்சமாக மதித்து தனக்கு எது சரியென்று படுகிறதோ அதைத் தைரியமாகச் செய்வார். எந்தவொரு செயலின் பின்பும் ஒரு காரணம் இருக்கிறது என்று நம்புபவர் அவர். யாரையும் குறை கூறாமல் அவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைச் சுட்டிக்காட்டுவார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பாவைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளத் தவறியதில்லை. பள்ளி சென்று படிக்காவிட்டாலும் தனது வாசிக்கும் திறமையாலும் அதீத ஞாபகசக்தியாலும் தனக்கும் தன்னைச் சுற்றியுள் ளவர்களுக்கும் ஆசிரியையாக இருந்தார். அம்மா நான் பாலக்காவிற்குப் பெண்ணாகப் பிறந்தாலும், உங்களையே பிறந்தநாளிலிருந்து ‘அம்மா அம்மா’ என்று கூப்பிடுவேன். நான் சின்னவளாக இருக்கும்போது நான் தனியாகக் கண்டியில் இருக்க மாட்டேன் என்று நவராத்திரியின்போது யாழ்ப்பாணத்திற்கு என்னையும் கூட்டிச் செல்வீர்கள். ரவிக்கும் எனக்கும் நாங்கள் பாடசாலையில் இருந்து வரும்போது நீங்கள் இருக்க வேண் டும். இல்லையென்றால் நாங்கள் தாங்க மாட்டோம். நீங்கள் எங்கள் எண் ணப்படியே நடப்பீர்கள்.

பாலக்காவிற்கு நீங்கள் மன்னி மட்டுமில்லை; நீங்கள் தாய். அதுபோல் அப் பாவிற்கும் (மாத்தளை) நீங்கள் தங்கையில்லை, தாய்தான். அப்பா யாரி- டமும் வாய்விட்டுப் பேச மாட்டார். நீங்கள் மறைந்த துயரம் கேட்டவுடன் வாய்விட்டுக் கதறினார். அப்பா ஆஸ்பத்திரியில் இருந்தபோது அவருக்கு தைரியமும் வாழ வேண்டும் என்ற ஆசையையும் கொடுத்தீர்கள். அப்பாவை ‘அண்ணா வா, போ’ என்று உரிமையோடு கூப்பிட்டு சகஸ்ரநாமத்தையும் ஸ்ரீமத் பாகவதத்தையும் படிக்கத் தூண்டினீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அய்யோ' என்ற வார்த்தையையே சொல்லாமல் எப்போதும் 'நாராயணா நாராயணா' என்று சொல்லிக் கடைசி நிமிடத்திலும் அந்த ஜபத்தோடேயே இறைவனடி சேர்ந்தீர்கள். ஆனால் நீங்கள் அப்பாவைத் தவிக்க விட்டுச் சென்றதுதான் தாங்கவில்லை. அப்பாவிற்கு நாங்கள் எத்தனை பேர் தைரியம் சொன்னாலும் உங்களுடன் சண்டை பிடித்து, உங்களை ஒவ்வொரு காரியத்திற்கும் எதிர்பார்த்து வாழ்வதையே அவர் விரும்பினார்; இன்னும் விரும்பிக்கொண்டிருக்கிறார். அம்பாள்தான் அப்பாவிற்கும் எங்களுக்கும் மனச் சாந்தியைக் கொடுக்க வேண்டும்.

— வத்சலா (மருமகள்)

ஸ்ரீ வடிவாம்பிகா தேவி எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் பிறந்து கண்டியில் பெரும் பகுதி வாழ்நாளைக் கழித்து அவுஸ்திரேலியாவில் மெல்போனில் கடைசியில் வாழ்ந்த திரிபுரசுந்தரி என்ற நாமம் கொண்ட தாயே! 'கண்டி அம்மா கண்டி அம்மா' என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் தாயே!

எவர் வந்தாலும் இன்முகத்துடன் வரவுபசாரம் பண்ணி வயிறார உணவு கொடுத்து வரவேற்கும் தாயே!

எல்லோரையும் தன் பிள்ளைகளாகப் பாவித்து எல்லாக் காரியங்களையும் அவ்வப்பொழுது செய்து மகிழும் தாயே!

தன் நலத்தையும், சுகத்தையும் பார்க்காது எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென உழைத்த தாயே!

பத்தினிப் பெண்கள் எப்படி வாழ வேண்டுமென நடப்பில் வாழ்ந்து காட்டிய தாயே!

நடமாடும் கொம்பியூட்டர் என்று நினைக்கத் தோன்றும்படி எல்லோரின் பிறந்த நாள், நட்சத்திரம், பரம்பரை முதலானவற்றை நினைவில் வைத்து அவ்வப்போது சொல்லும் தாயே!

எங்களை எல்லாம் தவிக்க விட்டு இப்படித் திடீரென அம்பாளின் திருவடி அடைந்த தாயே! இனி உங்களை பார்ப்பது எப்போது?

— தியாகராஜா (மருமகன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிண்டனில் வந்து நின்ற நாட்களை மறவோம்.

நான் செய்யும் பாதபூஜை கண்டு பரவசமடைந்து இன்புற்று அபிஷேக தீர்த்தத்தை ஆவலுடன் தினமும் அருந்திய என் பெறாதாய் மோட்சமடைந்து விட்டார். அன்று அம்மா மருத்துவமனைக்கு விரைந்து கொண்டிருந்த சமயம் என் கண்முன் தோன்றிய பகவானின் படத்திற்கும் அதில் நான் கண்ட விபூதிக்கும் அர்த்தம் தேடிக்கொண்டிருந்தேன். என் கல்யாணத்தின்போது என்னைக் கன்னிகாதானம் செய்து தந்த அந்தத் தாய் இப்பூவுலகைவிட்டுச் சென்ற செய்தி, சில மணி நேரங்களுக்குப் பின்னர் வந்தது. என் உடல் குளிர்ந்தது; பதட்டப்பட்டது; சிலிர்த்தது. 'அரிது அரிது மானிடப் பிறவி' என்பது உண்மை. ஆனால் அந்த மானிடப் பிறவியும் ஒரு பிடி சாம்பல்தான் என்பதும் ஆழ்ந்த உண்மை. அதை ஒரு நொடிப்பொழுதில் என் மனதில் பதித்த பகவான் தம் பாதத்தில் என் தாயை அடைக்கலம் கொண்டார் என்று அறிந்து அந்தப் புனித பாதுகையை நமஸ்கரித்து ஆறுதல் கண்டேன்.

— அருணா தியாகராஜா

பாட்டி! உங்களை கடைசியாகப் பார்க்கும் பாக்கியம் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் உங்களது விருப்பப்படி நீங்கள் சொல்லிய புத்திமதிகளை எமது வாழ்நாளில் நிச்சயமாக கடைப்பிடிப்போம். இது சத்தியம்.

— முகுந்தன், கௌசல்யா, ஜெயந்தன், ஸ்ரீஹரி, காயத்திரி,
சசிகலா, ஷாலினி, அபர்ணா, ஸ்ரீவித்யா.

## Grandchildren's Tribute

She always tells me to eat more.

— Ahalya

She was always there for everyone in good times and in bad. Everybody loved her.

— Anushya

She loved to play with me.

— Anuthama



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Loving, gentle, kind grandmother, full of inspiration. She has a very special place in my heart. May her soul rest in peace.

— Bhavani

She is a very special person. She loved all her grand children.

— Geetha

She played hide and seek with me.

— Jeevan

I enjoyed her cooking. She was a very sensible person. She told everyone to do good things.

— Kabilan

She is a very good story teller. She had a heart of gold. She loved to have fun and play games.

— Krishna

## Scaffolding

Sitting, quiet, watchful
Always glimmer, still within.
Lest we forget not,
All the peace that she brings.
When I think, don't you agree,
What she said was loving dexterity.
Loving dexterity she had,
With everything that she did.
She made me believe.
She justified all of life,
That made sense to me.
Selfish thoughts of how I feel,
Are abundant to her,
Calm,
Powerful,
Foundation,
That no-one can take from me.
Because she is alive,
With every breath you and I
Take.
Take the time to realize,
That she has touched both you and me.
So evident.
Her life WAS her message,
And through her metamorphosis,
Facilitated by death,
I implore,
We must see, only,
Love.
Peace.
And Joy.

— Hari



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

She is a great lady; one in a million.
She never got tired of giving to others.
She will live in our memories forever.

— Krithika

I like her cothamalli pachchadi (கொத்தமல்லிகீரை பச்சடி).

— Ragu

I had a long holiday and a good time with Paatti.

— Rama

She always went out of her way for others.

— Ramesh

She cared about everyone, whether they were good or bad. She always looked very happy. She always had time for others.

— Ratha

"....... It was really shocking to hear about *Paatti's* death. And we are all sad. Don't worry, this is because everybody has to die and *Paatti* is safe in the hands of God.

I think *Paatti* has enjoyed her life and she had a peaceful death for all her prayers. And she was not only your mother. But my mother as well. ....."

— Sashikala

She was a unique person who always gave and loved others never seeking anything in return.

— Sumi

She sacrificed her life for others.

— Suresh

She helped many people throughout her life.

— Theepan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி மணம் காணாத
# பண்பு நிறை பல்கலைக்கழகம்
# ஸ்ரீமதி திரிபுரசுந்தரி
# கைலாசநாத குருக்கள்

வைத்திய கலாநிதி அம்பிகாபதி
தலைவர், வேதாகம சபா, ஐக்கிய இராச்சியம்

*பெருவெற்றிகள் கண்டு பேரொளியுடன் பரிணமிக்க*
*பின்னேயிருப்பவள் பெண்ணொருத்தி*

என்பர் சான்றோர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் இந்து நாகரிகத்துறை, மனிதப் பண்பியற்றுறைத் தலைவர் இளைப்பாறிய பேராசிரியர் ப்ரஹ்மஸ்ரீ கைலாசநாத குருக்களின் இடையறா முயற்சிகளைத் தொடர்ந்து சிறப்பான நற்காரியங்கள் பலவற்றைத் திறமையுடன் செயற்படவைத்த பெருமை அன்னாரின் அருமைத்துணைவியார் ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அவர்களையே சாரும்.

*எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு* — குறள்

பண்பிற்கே அணிகலனான அவரை அணுகிய அனைவரும் அன்புடன் அழைக்கும் வழமை - 'அம்மா'. இயல்பாகவே தாமே கற்று வளர்த்துக் கொண்ட அறிவும் அதனாற் பெற்ற மனித தொடர்பு உத்திகளும் விசேஷமானவை. அவை அவருக்கே உரிய தனி அழகான பாணி.

முதியோரையும் இளையோரையும் இசைவாக அணுகும் சாலச்சிறந்த சீரிய பண்பினை அவரிடம் கண்டேன். எனது பல்கலைக்கழக வாழ்க்கை நினைவலைகள் 'அம்மா'வுடன் பின்னிப் பிணைந்தே விளங்கும். பேராதனை வளாகத்தில் கால்பதித்த நாள் முதல் இன்றுவரை அவரது இணையற்ற குணாதிசயங்கள் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தை ஏகுவோர்க்கு இசைந்தவாறு இரவோ பகலோ எச்சந்தர்ப்பத் திலும் இன்முகத்துடன் வரவேற்று உபசரிக்கும் பாணி - பள்ளிப் படிப்பில் லாது தாமாகவே அள்ளிப் பருகிய பண்பாலேதான் பரிணமிக்கும் என்பதை அவர் புரிய வைத்தார்.

*நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்*
*பண்பு பாராட்டும் உலகு* — குறள்

அன்னாரது அளப்பரிய அறிவுக் கூர்மையும் குன்றாத குணநலன்களுமே அவரை அனைவரும் இயல்பாகவே 'அம்மா' என அழைக்க வைத்தது. குருக்கள் மாமா கூடத்துள் புகுந்துவிட்டால் 'அம்மா' என்றால் - பெருமரி யாதையுடன் அன்னையே அன்றி வேறொருவரையும் குறிப்பிடாதவாறு ஒரு நிலையான இலச்சினையைப் பதித்து விட்டார்.

குழந்தைகளுக்குக் குழந்தையாகவும் - மாணவர்களுக்கு மாணவராகவும் - பெரியோர்க்கு பெரியோராகவும் இயைந்து நிலை தளராது நீதியுடன் யாவ ரிடமும் பணிவான வார்த்தைகளைக் கூறும் அவர் குரலை இனி எப்போது கேட்போம் என ஏங்கி நிற்கின்றேன்.

மாணவர்க்கு ஏற்படும் ஏற்றத் தாழ்வு நிறைந்த மனநிலைகளைப் புரிந் தறிந்து அன்பு கலந்த நல்வார்த்தைகளை நயமுடன் வழங்கும் 'அம்மா' வின் பாணியே தனி. பரீட்சையில் வெற்றி காணத் தவறியபோதும் நாசூக் காக அறிந்து - புரிந்து அன்பு கலந்த ஆழ்ந்த கருத்துமிகு ஆறுதல் தந்து ஊக்கமூட்டும் 'அம்மா' வார்த்தைகளினால் - தேறிய அறிவு பெற்ற பல் கலைக்கழக மாணவர்களது போசகர்களையும் பலபடிகள் மிஞ்சி விட்டிருந் தார். பள்ளிமணம் காணாத 'அம்மா'வின் அத்தகைய திறமைக்கோர் சிகரம் அவர்தான்.

இவ்வாறு பெற்றோரைப் பிரிந்து பலதூரம் கடந்து பேராதனை வந்து கற் றுக்கொள்ள வந்தோரை, மற்றோர் மாசுபடாதவாறு மகத்தான முறையில் சகத்தில் முன்னேற வழிகோலி தன்னிகரில்லா தனியிடம் பெற்றவர் அனை வரும் வாஞ்சையுடன் அழைக்கும் 'அம்மா'.

எனது உள்ளத்தில் உறுதியாக பதிந்த 'அம்மா'வின் குணநலன்கள் கண மேயும் அகலாது. இன்று அவர் எம்மிடையே இல்லையே என நம்ப இய லாதவாறு இறைவன் அவரை எம்மிடமிருந்து பிரித்துவிட்டார். அவருக்கே பொறுக்கவில்லைப் போலும்.

*பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை உடைய செயல்* — குறள்

'அம்மா'வின் ஆத்மா சாந்தியடைய அவரது பாணியில் எம்மாலான கருமங் களை பெருமையுடன் தம்மாலானவாறு நிறைவேற்றி பெம்மானைப் போற் றிடுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் நிரந்தர இடம் வகிக்கும் 'கண்டி அம்மா'

ஸ்ரீ சீ. பாலசுப்பிரமணியம்
ஒட்டாவா, கனடா

*சம்பு மகிழ் ஜகன்மாதா சரணமொரு கணமறவா*
*பண்பு நிறை பதிவிரதை பரமசிவன் துணை அனையாள்*
*அன்பு நிறை வாஞ்சையுடன் அனைவர் புகல் (கண்டி) அம்மா*
*தம்பெருமை தாள் வணங்கித் தமியோமும் நினைகுவமே*

நம் வாழ்வில் ஒவ்வொரு நாளும் பலவிதமான பெரியோர்களும் நண்பர்களும் தெரிய வருகின்றனர். இவர்களில் சிலர் உறவு என்ற தொடர்பினால் அடிக்கடி பழக்கப்பட்டு நெருக்கம் கொள்வர். உறவு முறை இருந்தும் ஈடுபாடு இன்மையால் நினைவில் தொலைவிலேயே இருக்க நேர்பவர்களையும் காண்கிறோம். இவை எதுவுமின்றி தம்மிடம் உள்ள சில விஷேசமான இயல்புகளினால் மனதில் நிரந்தரமான இடத்தைப் பெறுபவர் சிலரையும் காணமுடிகிறது. இந்த வகையில் உன்னதமான பிரிவில் சேரும் குணவதியே நம் எல்லோரது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான 'கண்டி அம்மா'. அவருடைய தோற்றமும் பார்வையும் பேசும் முறையும் எவர் மனதிலும் இறுக்கமாக நிலைத்து விடும்.

மஞ்சள் கொழிக்கும் முகத்தில் பொலியும் விசாலமான நெற்றித் திலகம் தெய்வீகத்தைப் பிரதிபலித்துக் கொண்டேயிருக்கும். அவற்றின் சௌந்தர்யம் அசலமான ஸௌமங்கல்யத்தை ஊர்ஜிதம் செய்யும் சின்னமாக விளங்கும். மாமா அவர்களது நாவில் ஒவ்வொரு காலையிலும் உச்சாடனமாகும் ஸௌந்தர்யலஹரியில் வரும் சுலோகம் ஒன்று நினைவுக்கு வருகிறது.

'மிகக்கொடியதோர் விஷந்தனைப்பரமன் உண்டபின்னும் அது அவனைத் தாக்கவில்லை; ஈசனுக்கு ஒன்றும் ஏற்படவில்லை என்றால் அதற்குக் காரணம் அம்பாளின் சுமங்கல்யத்தினது மஹிமை; கணவனது ஆயுளை நிர்ணயிக்கும் (ஜீவன ஹேது) தாலியின் வலிமை' என்பதாக சங்கர பகவத் பாதர் துதி ரூபமாக ஒரு விஞ்ஞாபனம் செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த சுமார் இருபத்தைந்து வருடங்களில் மாமா அவர்கள் பல தடவை பெருநோய் வாய்ப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு எல்லோர் மனதிலும் தவிப்பை உண்டாக்கி இருக்கிறார்; பின்னர் ஒருவாறாக தேறியிருக்கிறார். அந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் மாமாவின் உயிர் பிழைப் பதற்குக் காரணமாக கருதிய, அவருக்கு சிகிச்சை செய்த வைத்திய நிபுணர்களைப் பாராட்டுவதுண்டு. போற்றுவதுண்டு. இப்போது அந்தச் சம் பவங்களை நினைத்துப் பார்த்தால், அவரது உய்விற்கான காரணம் கண்டி அம்மாவின் மாங்கல்யத்தின் பலம்தான் என்பது வெள்ளிடை மலையாகத் தெரிகிறது.

அவரது கண்கள் எப்பொழுதும் கருணையையே பொழிந்து கொண்டிருக்கும். எப்படி தினந்தோறும் முகத்தில் தேய்த்துக் கொள்ளும் மஞ்சள் நாள-டைவில் முகத்தை அவ்வண்ணமுடையதாக்கியதோ அங்ஙனமே அகிலாண்ட நாயகியின் அருள்மிகும் கண்களை எப்பொழுதும் நினைத்திருந்ததால் அவர் கண்களும் அருள் நிறைந்து விளங்கலாயிற்று.

எந்த நேரமும் அவர் முகத்தில் அபிராமிப்பட்டர் குறிப்பிடுவதுபோல் 'பனிமுறுவல் தவழத்திரு நகை' மிளிரக் காணலாம். பண்பும், பரிவும் நிறைந்த வார்த்தைகள் தவிர ஒன்றும் கேட்க முடியாது. எவருடன் தானும் பழக ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே பாசத்துடன் குலவுவதற்கும் உரிமையுடன் அன்பினை வலியுறுத்துவதற்கும் அவருக்கு இணை அவரேதான்.

கண்டி அம்மா மனம் எப்பொழுதும் மற்றவர்கள் நலன்களையே வேண்டிக் கொண்டிருக்கும். ஒவ்வொருவரது நலன்களையும் நேரிலேயோ பிறர் வாயிலாகவோ அறிந்து கொள்வதில் மிகவும் ஆர்வம் உள்ளவர். எமது கோள் நிலைகள் அவற்றின் பலாபலன்கள் யாவும் எம்மிலும் பார்க்க அவரது ஞாபக சக்திக்கே தெரிந்திருக்கும். எமக்கு மனச் சங்கடங்கள் தோன்றும் நேரங்களில் அவற்றுக்கான காரணங்களை சோதிட வழியில் விளக்கி அதன் நிவர்த்திக்கான முறைகளை விபரித்து நமக்குத் தேறுதல் சொல்லும் வகை எவருடைய மனதுக்கும் தெம்பையும் நிம்மதியையும் கொடுக்கும்.

கண்டி அம்மா, மாமா அவர்களது லட்சியங்களிலும் அபிலாஷைகளிலும் உறுதுணையாக விளங்கினார். கல்வித்துறையிலோ ஆன்மீக மேம்பாட்டு வழிகளிலோ நண்பர்கள், மாணவர்கள் இவர்களிடம் பழகுவதிலோ வீடு வந் தோரை முகமலர்ச்சியுடன் உபசரிப்பதிலோ எல்லாவற்றிலும் மாமாவுக்கு வலது கையாக இருந்தார். மாமாவைப் பொறுத்தவரையில் சகலமும் அவரே 'ஸ்ரீமாதா' என்ற நாமத்திற்கு வியாக்கியானம் கூறுபவர்கள் மும்மூர்த் திகள் உட்பட எல்லோர்க்கும் அன்னையானவள் என்று உரைப்பதைப் பார்த்திருக்கிறோம். அதற்கு இணங்க கண்டி அம்மாவும் சில வேளைகளில் மாமாவுடைய அன்னையாகவே மாமாவைப் பார்த்துக் கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனைத்தக்க மாண்புடையாள் ஆகிதற் கொண்டார்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை* — குறள்

எனும் வள்ளுவர் சொல்லுக்கு உரிய இலக்கணம் கண்டி அம்மா ஆவார்.

மொத்தத்தில் கண்டி அம்மா இவ்வுலகில் ஒரு நடமாடும் தெய்வமாகவே திகழ்ந்தார். அவரைத் தெரிந்து கொள்ளவும் அவரது அன்பைப் பெறவும் பாக்கியம் கொண்ட நாம் அதிர்ஷ்டசாலிகளே. இப்பொழுது தெய்வத்துடன் கலந்து தெய்வமாகிவிட்ட அவரது ஆசியும் அன்பும் எம்மை என்றும் வாழவைக்கும் என்பதில் ஐயமே இல்லை.

தமது வாழ்நாளில் இறுதி நாள் வரை தமது பணியினால் கண்டி அம்மா, மாமாவினது கைங்கர்யங்கள் ஒவ்வொன்றிலும் பக்கபலமாக நின்று தைரியம் கொடுத்தவர். அவரது ஆன்மாவின் ஆசிகளை முற்கொண்டு, மாமா அவர்களது ஆறுதலுக்கும் ஓய்விற்கும் உகந்த முறையில் இயன்ற அளவில் நாம் உறுதுணையாக இருக்க வேண்டியது எம் தலையாய கடனாகும். அதுவே கண்டி அம்மாவுக்கு நாம் செய்யக்கூடிய மரியாதையாகும்.

அம்மா அம்மா அம்மா அம்மா
அம்மா அம்மா அம்மா அம்மா

திரிபுரசுந்தரி நாமமே அம்மா அம்மா
அன்பின் உருவமே அம்மா அம்மா

மாந்தருக்குள் மாணிக்கமே அம்மா அம்மா
அம்பாள் பக்தையே அம்மா அம்மா

அரவணைக்கும் அன்பே அம்மா அம்மா
பொறுமையின் சின்னமே அம்மா அம்மா

பாசத்தின் சிவமே அம்மா அம்மா
கருணை காட்டும் உள்ளமே அம்மா அம்மா

ஸ்ரீராம நாமம் ஜெபித்த அம்மா அம்மா
ஸ்ரீராம சரணம் என்றே சென்ற அம்மா அம்மா

— அருணா தியாகராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மாள் கைலாசநாத குருக்களுக்கு இரங்கல் செய்திகள்

We are all shocked and disheartened to hear the news of sudden demise of our beloved Kandyamma.

Please accept our deepest sympathies at this juncture of irreparable loss.

We pray Sri Vadivambikai to bestow Her Blessings to you to withstand this heavy loss.

May Kandyamma's Soul Rest in Peace at the Holy Feet of Sri Kamalambika Sametha Sri Kailasanatha Swamy.

Om Shanthi! Om Shanthi!! Om Shanthi!!!

Gopalakrishna Iyer & Family
(Prof. P Goapalakrishna Iyer)
Jaffna

"....... Thiripurasunthari – what a beautiful name – has left us, but her example remains, from which there can be no better to copy for the children. Her unostentatious grace, her utter simplicity, her charity of outlook, her deep humanity and her religious nature are ineffaceable by death and remain for our inspiration for all time. These qualities that she possessed in abundant measure make the true nobility. ........"

S Ponnuchchami
Australia

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......என் அம்மாவைப்போல் 'தியாகராஜா' என அன்பாக வாய்நிறைந்த சிரிப்புடன் கூறுவீர்களே! 1944இல் இந்தியா போய் - அடுத்த வருடம் அம்மாவை திடீரென இழந்த நான் - அதே முகத்தோற்றம், சிரிப்பு, கடுகடுப்பே இல்லாத முகம், சிரிப்பு - சத்தமில்லாத அமைதி பேச்சு எல்லாம் அம்மாபோல் உங்களைக் காணும் வேளை எல்லாம் அம்மா என எண்ணி உள்ளத்தில் மகிழ்வேனே.

...... இதுவரை நமக்கு, ஏன் நம் சமூகத்துப் பெண்களுக்கு வீட்டு விசேடங்களில் ([illegible]) ஆசார, நடைமுறை பற்றிய சந்தேகங்களைக் கேட்டுத் தெரியவைக்க, ஒழுங்குமுறைகள் கூறி வழிநடத்திய பெரிய ஆலமரம் சாய்ந்துவிட்டதை, ஓய்வுபெற்றுவிட்டதை நினைக்க நினைக்க மனவேதனை - கவலை எங்களுக்கே தாங்க இயலவில்லையே! அவவின் பிரிவு உங்களுக்குச் சொல்ல வேண்டுமா? வலது கை பேரிழப்புத்தான். எல்லாம் தெரிந்த என் குருவுக்கு நான் என்ன புத்தி கூற முடியும். எனினும் தாங்க முடியாததுதான் பிரிவு. இது இயற்கை என எண்ணி மனம் ஓரளவு அமைதி பெறுங்கோ. ........"

வியாகரணசிரோன்மணி பூர்ண. தியாகராஜ குருக்கள்
கனடா

"...... நடமாடும் பல்கலைக்கழகமாக விளங்கிய அத்தையைப்பற்றி நான் சொல்வதற்கோ எழுதுவதற்கோ தகுதியற்றவள். எனினும் என் சிறிய புத்திக்கு எட்டியவற்றை எழுதுகிறேன். இன்சொல், பொறுமை, அடக்கம், விருந்தோம்பல் ஆகியவற்றின் ஒருங்கே உருவான தோற்றந்தான் எங்களால் அன்போடு அழைக்கப்படும் கண்டி அத்தை. ......"

ஜானகி இராமகிருஷ்ணன்
கனடா

"...... என்னென்று சொல்வேன். உங்களுக்குத் தெரியாத தத்துவமா நான் சொல்ல முடியும். அன்பிற்குரியவரை இழக்கும்போது எல்லா ஞானமும் தத்துவமும் காற்றில் பறந்துவிடும். செயலிழந்து குழந்தைபோல் குலுங்கி அழும் நிலைதான் மிஞ்சும். எனினும், காலம் போகப் பிரிந்தவர் பற்றிய இனிய நினைவுகள் நெஞ்சில் நிறைந்து நின்று துயர் நீக்க உதவும். அம்மாவும் இதையே விரும்புவார் என்பதை மறந்துவிடாதீர்கள். ......."

மணியக்கா (ஞானம் இரத்தினம்)
அவுஸ்திரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......எமது உறவினர்கள் பலரின் திருமண வைபவங்களை பாட்டி முன் னின்று நடத்தி வந்தமை ஒருவராலும் மறக்க முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் எல்லோரது குடும்பத்துக்கும் நீங்களும் பாட்டியுந்தான் கலங்கரை விளக்கம் போலிருந்தீர்கள். அம்பிகா, வத்சலா இருவரின் திரு மணத்திலும் பாட்டி பெண்பார்க்கும் படலம் முதல் திருமணம் இனிதாக நிறைவேறும்வரை ஆற்றிய பங்கு அளவிட முடியாதது. எனது அறிவுக் கெட்டியவரை எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரதும் பிறந்த நட்சத் திரம், நாள், திகதி எல்லாம் பாட்டியின் விரல் நுனியில் வைத்து அவ்வப் போது கூறிக்கொள்வா. அப்படிப் பார்க்கையில் அவவொரு நடமாடும் கணனி என்று கூறினால்கூட மிகையாகாது. அத்துடன் வயதில் பெரியவர் களான நீங்கள் இருவரும் நம் எல்லோருக்கும் தாய், தந்தை, நல்லாசான் போன்றிருந்தீர்கள். இப்போது எங்களுக்குத் தாய்க்குத் தாயாக இருந்த பாட்டி எங்கள் எல்லோரையும் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறையடி சேர்ந்து விட்டார்கள்.

ஒவ்வொர் ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் துணை நின்றிருப் பாள் எனக் கூறுவார்கள். ஆனால் எமது குடும்பங்களிலுள்ள பல ஆண் களின் வெற்றியை பாட்டியும் நீங்களுந்தான் நிர்ணயித்தீர்கள்; நீங்கள் அறி யாமலே என்றால்கூட மிகையாகாது. இப்படிப்பட்ட ஒருவரை நாம் இழந்து நிற்கின்றோம். எங்களெல்லோருக்கும் தாயாக இருந்தவர் இப்போது இல்லை என நினைக்கையில் தாரை தாரையாக கண்ணீர்தான் வருகிறது. என்ன செய்யலாம், பூமியில் பிறந்துவிட்டால் இறப்பு என்பதுதான் நிச்சயம். அதனைத் தெரிந்துகொண்டும் அதனைத் தாங்கமுடியாமல் தவிக்கின்றோம். மிகுதியான எங்களின் வாழ்நாளைக் கழிப்பதற்கு இதனைத் தாங்கிக் கொள்ளவேண்டி இருக்கின்றது. இருந்தாலும் பாட்டியைப் பொறுத்தவரை பாட்டி அவர்கள் ஒரு பூரணமான வாழ்க்கையையே அனுபவித்து உங்க ளுடன் 60 வருடங்கள் வாழ்ந்துவிட்டார்; தீர்க்கசுமங்கலியாகவே மறைந்தும் விட்டார். இப்படியான வாழ்வும் மறைவும் எல்லோருக்குமே அமைவதில்லை என நினைத்து எமது மனதைச் சாந்தப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான் அவசியம். வயதுபோன வேளையில் ஊன்றுகோல் போலிருந்த பாட் டியை இழந்து தவிக்கும் உங்களுக்கும் கோவிலுக்கு நிகரான தாயை இழ- ந்து பரிதவிக்கும் கௌரியக்கா, அத்திம்பேர், ஸ்ரீ அண்ணா - மன்னி, மற் றும் குழந்தைகள் யாவரின் துன்பத்திலும் நாமும் பங்குகொள்வதுடன் எங் கள் இருவரின் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்* — குறள்

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்குக்கமைய பாட்டியின் ஆத்மா சாந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியடையும். உங்கள் அனைவருடன் சேர்ந்து நாமும் இங்கு பாட்டியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்."

பாலா - அம்பிகா
கொழும்பு

## கண்ணீர் அஞ்சலி

அமரர் ஸ்ரீமதி திரிபுரசுந்தரி கைலாசநாத குருக்கள்

எமது ஆருயிர் அன்னையைப் போன்று அன்பு பாராட்டி எமது நெஞ்சங் களில் நீங்கா இடம்பெற்ற அம்மையாரின் ஆத்மா முன்னேஸ்வரம் ஸ்ரீமுன் னேஸ்வரநாதன் திருவடிகளில் அமைதிபெறப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி. ஓம் சாந்தி. ஓம் சாந்தி.

அன்னாரின் பிரிவாற் துயருறும் வணக்கத்துக்குரிய குருக்கள் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அமரராகிய அம்மையாரின் திருவடிகளில் கண்ணீர் அஞ்சலி சமர்ப்பிக்கும்,

ஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள் (ராஜன்)
ஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஜயாமணி)
ஸ்ரீ தியாக முருகானந்தக் குருக்கள் (நந்தன்)
குடும்பத்தினர்
கனடா

ஸ்ரீமதி திரிபுரசுந்தரி கைலாசநாத குருக்கள் அவர்கள் லண்டனில் திடீரென மறைந்த சேதி கேட்டு அளவிலாத் துயரடைந்தோம். அன்னார் தமது உள் ளத்தாற் பொய்யாத உண்மை அன்பினால் எம் உள்ளத்துள் என்றும் நீங் காத இடங்கொண்டுள்ளார். குரு மாதாவின் திருவடிகளில் எமது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கிறோம். அவரது ஆத்மசாந்திக்காகவும் அவரைப் பிரிந்து துயரக்கடலுள் மூழ்கியிருக்கும் கலாநிதி கைலாசநாத குருக்கள் குடும்பத்தினர் மன ஆறுதல் பெறவும் ஆண்டவன் அருள்புரிவாராக.

ஓம் சாந்தி.

டாக்டர் சிவஸ்ரீ நா சோமாஸ்கந்தக் குருக்கள், காஞ்சனா
(பேர்த்) அவுஸ்திரேலியா,
இந்துக் குருமார் கவுன்சில் மேற்கு மாநிலப் பிரதிநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

வேதாகம சபா
டென்மார்க்

அம்மாவே, எங்கு சென்றீர்?

நேற்றுவரை எம்முடன் கலந்து, எமக்குள் ஒருவராகி நின்ற தாங்கள் இன்று எங்கே? எதை எடுத்தாலும், ஆரம்பித்தாலும் 'அம்மா', 'அம்பாள்' என்று நினைத்து சொல்லிச் சொல்லி இன்று தாங்கள் அந்த அன்னையிடமே சென்றுவிட்டீர்களோ?

டென்மார்க்கில் தாங்கள் வந்து நின்ற காலம் குறைவுதான். இருந்தபோதும் எம்முடன் உறவாடி எமது சபாவின் ஸ்ரீசக்கர பூஜையில் தாங்கள் குடும்ப சமேதராகக் கலந்து, பூஜையின் முக்கிய விடயங்களை அனைவருக்கும் ஞாபகப்படுத்தி பூஜையை அழகுற செய்த கணவருக்கு சகல உதவி-களையும் உதவிக் குருக்கள் போல் நின்று புரிந்த அந்த நாளை எப்படி மறப்போம்? இன்று இளைஞர்களுக்கே ஞாபகமறதி. ஆனால் தங்களின் ஞாபகசக்தியையும், குடும்பத்தின் ஒரு அங்கத்தவரை கூறினாலே அந்த குடும்பத்தின் முழு அங்கத்தவரையும் எங்களுக்கு ஞாபகப்படுத்தும் தங்களின் ஞானம்!

எதை எழுத அம்மாவே!

சென்றீரோ எங்களையெல்லாம் தனிமையில் விட்டு?
எங்கள் சுமங்கலிப் பூஜையில் தாங்கள் கலந்த நாளை
இன்றும் நினைக்கிறோம்! என்றும் நினைப்போம்!

மறைவின்போதும் கூட தங்கள் கணவரின் காலைக் தொட்டு வணங்கித் தாலியை கையில் பற்றியபடியே உலக அன்னையாகிய அம்பாளிடம் சென்றீரோ?

அம்மாவே தங்கள் மறைவால் வாடும் உற்றார் உறவினர் குடும்பத்தாருடன் டென்மார்க் வாழ் அந்தணர்கள் அனைவரும்
சேர்ந்தே வாடுகிறோம்;
வணங்குகிறோம்;
கண்ணீர அஞ்சலியை உரித்தாக்குகிறோம்.

தங்கள் பிரிவால் வாடும்
டென்மார்க் வாழ் அந்தணர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழும் பிரமாதி வருடம் புரட்டாதித் திங்கள்
17ஆம் நாள் திங்கட்கிழமை, அபர தசமித் தினத்தில்

ஈழநாட்டின் அந்தண குல சிரேஷ்டரும் பேராசிரியருமான
கலாநிதி ப்ரமஸ்ரீ கைலாசநாத குருக்களவர்களின்

பிரிய தர்மபத்தினி,
ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மா

லண்டனில் சிவசாயுச்சியம் பெற்றது குறித்துத்

தென்னாபிரிக்கா வாழ் சைவமக்களதும் ஈழச்சிவாச்சாரியார்களதும்
சார்பில்
டர்பன், ஓவர்போட் ஸ்ரீநிவாசப் பெருமாள் தேவஸ்தான அர்ச்சகர்
ப்ரமஸ்ரீ பாலசுந்தரக் குரு தம்பதிகள் ஆக்கிய

# நினைவஞ்சலி மலர்கள்

## திதி வெண்பா

ஆண்டு பிரமாதியில் அமைந்த நற்கன்னி
பூண்ட தசமியில் தேயும் மதிவாரம் - ஆண்டகை
குரவன் கைலாசநாதன் மனையாள் திரிபுரசுந்தரி
சிரம் கொண்டாள் செஞ்சடையான் பதம்.

## இரங்கற்பா

ஒருவரைச் சேர்ந்து இருவரைப் பெற்று
பருவரை எடுத்தானைப் பாதத்தால் நசித்த
பெருவரையன்றன் பேர்துணைக் கொண்டு
அருவரை நோக்கி அரும்பயணம் கொண்டீரோ!

பூவுண்டு பொட்டுண்டு புனித நாயகன்
பாவுண்டு பண்ணுண்டு என்றெண்ணிப் புவியில்
வாழ்வுண்டு களித்து மகிழ்ந்தீரே - இனிப் பிறவி
மாழ்வுண்டு எனவுரைத்தீரோ இன்றெமக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே ஆண்டவன் முன்னைநாதன் விரலால்
தன்னை நசுக்கத் தலையிழந்து அழிந்தொழியப்
பின்னே ஆண்ட பேரரசையும் பார்த்தபின்
என்னே இவ்வாழ்வு என்றெண்ணிக் கொண்டீரோ!

கீழிருந்து நோக்கில் எதுவும் தெரியாது
மேலே போனால் வடி(ை)வ(ா)ப் பாக்கலாமென
ஏழ்விசும்பு கடந்து எல்லை வெளி தாண்டிக்
கோள்களினூடே குறுகி மறைந்தீரோ!

அறிவுப் பசி தீர்க்க அருமறையோதும் குரவன்
வயிற்றுப் பசிதீர்த்து வையகம் புகழ வைத்தீர்!
அய்யா! அய்யா! என்றால் குரல் கேட்க அவரிருக்க
அம்மா! அம்மா! என்று இனி யாரை அழைப்போம் யாம்!

## தேற்றப்பா

ஒரு மாமரமறுத்தான் தந்தை தம்மிடம்
வருமாறு அழைத்ததாற் சென்ற பெருமாது
இறுமாப்புடன் இனிது வீடுபெற்ற செயலைப்
பெருமாப்புடன் பேசி ஆறுதல் கொள்மினே!

சாந்தி! சாந்தி! சாந்தி!

பா பாலசுந்தரம் குருக்கள்
மாதங்கி
கபிலன்

டர்பன்
தென்னாபிரிக்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மாள் வாழ்க்கை வரலாறு

திரிபுரசுந்தரி அம்மாளின் இவ்வுலக வாழ்க்கை 1928ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதியன்று முன்னேஸ்வரத்தில் ஆரம்பம் ஆயிற்று. அவர் தந்தையார் பிரம்மஸ்ரீ சாம்பசிவ குருக்கள். தாயார் கமலம்மாள். திரிபுரசுந்தரி அம்மாளுக்கு ஒரு தம்பி. மிகச் சிறு வயதிலேயே இறந்துபோனான். பத்து வயதுப் பிராயத்தில் தாயாரை இழந்தனர். பின்னர் பெரியதாயாரான முன்னேஸ்வரம் சோமாஸ்கந்த குருக்களின் மனைவியார் வளர்த்து வந்தார். கஷ்டங்கள் நிரம்பிய பாலபருவத்தில் இரு வருடங்கள் உருண்டோடின. முன்னேஸ்வரத்தில் பள்ளிக்கூடங்கள் இல்லாத காரணத்தால், பள்ளிக்கூடப் படி ஏறாதவாறே காலம் கழிந்தது. 12ஆம் வயதில் (1940) யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த இவரின் அத்தையின் மகன் பாலசுப்பிரமணிய ஐயரின் விவாகத்திற்காக, தன் தங்கை பரமேஸ்வரி அம்மாளுடனும் தமக்கை வடிவாம்பிகையுடனும் யாழ்ப்பாணம் நல்லூருக்கு பிரயாணம் ஏற்பட்டது.

இவ்வேளை நல்லூர் கார்த்திகேயக் குருக்களினதும் முன்னேஸ்வரம் சுந்தராம்பாளினதும் மூத்த புதல்வன் கைலாசநாதனுக்கு 18 வயது ஆயிற்று. பரமேஸ்வராக் கல்லூரியில் *Matriculation* வகுப்பில் பயின்று கொண்டிருந்த காலம். தந்தை சோதிட சாஸ்திரத்தில் நிபுணர். கிரியைகள் செய்வதிலும் வல்லவர். நல்லூரில் காணி வாங்கி சிவாலயம் ஒன்றைப் புதிதாகக் கட்டி எழுப்பியவர். இராமநாத வள்ளலின் குருவாய்த் திகழ்ந்தவர். இவரது இன்னொரு பெயர் தம்பையாக் குருக்கள். சோதிட நிபுணரான இவர் தன் மனைவியாரின் ஆயுள் முடிவடையப்போவதைக் கணித்து உணர்ந்தார். ஆறுமாதங்களில் இவ்வுலக வாழ்வை நீக்க இருந்த இவ்வுத்தமி தான் உயிருடன் இருக்கும்வேளை தன் மூத்த மைந்தன் கைலாசநாதனுடைய விவாகத்தைக் கண்டு மகிழவிரும்பினார். 1940ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விவாகம் நிறைவேறியது. நினைத்ததை உடனே நிறைவேற்றும் ஆற்றல் மிக்க தந்தையார் தம் மகனுக்கு, கல்யாண வீட்டிற்காக வந்த மூன்று கன்னியருள் திரிபுரசுந்தரி அம்மாளை மகனது பூரண சம்மதத்துடன், விவாக வைபவத்தை ஒரு வாரகாலத்தில் கோலாகலமாக நிறைவேற்றினார். கல்யாணம் நிச்சயித்து நிகழும் போது கைலாசநாதனுக்கு வயது 18. திரிபுரசுந்தரிக்கு வயது 12. மணம் நிகழ்ந்ததும் கைலாசநாதன் படிப்பைத் தொடர்ந்தான். 1941இல் மற்றிக்குலேஷன் படிப்பைத் தொடர்ந்து பரீட்சையில் சித்தி எய்திய புதல்வனை சட்டப்படிப்புக்கு தயாராக்க விரும்பிய தந்தை 1942இல் லண்டன் இன்டர்மீடியட் பரீட்சைக்குத் தயாராக்கினார். பரீட்சை நடைபெறும் வேளை தந்தை இதயநோய் வாய்ப்பட்டு கஷ்டப்பட்டு சிகிச்சை பெற்றார். தந்தையின் உயிர் பிரியுமோ என்று அஞ்சிய தாயார் நோயுற்றார். தாயார் சுந்தராம்பாள் தை அமாவாசையன்று திடீரென ஆஸ்துமா நோய் மிகுதியால் அல்லல் உற்று 36 வயதில் கமலாம்பிகை திருவடிகளைச் சுமங்கலியாகச் சென்றடைந்தார். சோதிடத்துக்கமைய தந்தை குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்தே விட்டது. தாயார் மறைந்து 6 மாதமளவில் ஆடி சதுர்த்தியன்று தந்தையும் இறைவனடி சேர்ந்தார்.

இவ்வேளையில்தான் கைலாசநாதனதும் திரிபுரசுந்தரியினதும் வாழ்க்கை ஆரம்பமாயிற்று. இருவர் வாழ்க்கையிலும் நிகழ்ந்த சம்பவங்களை எல்லாம் எழுதுவது என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றால் அவ்வாழ்க்கை வரலாற்று விபரம் கைலாசநாதனதோ திரிபுரசுந்தரியினதோ என்று பிரித்தறிய முடியாது ஒருங்கே நிகழ்ந்தது எனத் துணிந்து கூறலாம். இவர் வாழ்க்கை கணவனின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்ததொன்றாயிற்று. தன் வாழ்க்கையை இவ்வாறு பன்னிரண்டாண்டு பிராயத்தில் இணைத்துக்கொண்ட திரிபுரசுந்தரி சிறுபிராயத்திலேயே குடும்பப்பாரம் வகிக்கத் தொடங்கினார். கைலாசநாதன் தம்பி இரத்தினகைலாசநாதன், இவர்களின் தங்கை பாலாபரமேஸ்வரி இருவரும், மனைவியை இழந்த சாம்பசிவக் குருக்களும் இணைந்த குடும்பம் இச்சம்பவங்களின் பின் நல்லூரில் வாழ்ந்து வந்தது. ஆடியில் தந்தையின் மரணத்துக்குப் பின் இரண்டு மாதங்களில் நவராத்திரி விழா வந்தது. அதை விமரிசையாகக் கொண்டாடும் ஏற்பாடுகள் தொடர்ந்தன. அம்பாள் சந்நிதியில் பெருஞ்செலவில் கல்யாணவீட்டுக்கென அமைத்த அதே விரிவை அமைத்து பந்தல் போடப்பட்டது. முன்னேஸ்வரத்தில் நிகழ்ந்து வந்த அதே சிறப்புடன் மாமானார் சாம்பசிவக் குருக்கள் மேற்பார்வையில் நவராத்திரி மிகவும் சிறப்பாக நிறைவேறிற்று. நவராத்திரியைத் தொடர்ந்து கார்த்திகை மாதத்தில் கடைசி சோமவாரமும் விமரிசையாக நடைபெற்றது. 1942ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் நியமனம் அதிபர் வீரசிங்கம் அவர்களின் அநுசரணையின் பேரில் கிடைத்தது. அக்காலத்தில் இதற்கு வழங்கப்பட்ட மாத ஊதியம் நாற்பது ரூபாய் மட்டுமே. சில மாதங்கள் உருண்டோடின. இன்டர்மீடியட் பரீட்சையின் பெறுபேறுகள் வந்தன. இவ்வேளையில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பயிற்சிக்கான முயற்சியில் இறங்கிய கைலாசநாதனின் பல்கலைக்கழக நுழைவு பரீட்சைக்கு வேண்டிய ஆயத்தங்கள் நிகழ்ந்தன. ஆங்கிலம், சமஸ்கிருதம், லத்தீன், தமிழ் ஆகிய நாலு பாடங்களைத் தெரிந்தெடுத்தான். தந்தையின் விருப்பப்படி சட்டக்கல்வி பயில விருப்பமே இல்லை. அங்கு பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடரும் விருப்பம் உண்டாயிற்று. பரீட்சையில் சித்தி பெற்றதும் 22 வயது நிரம்பிய இளைஞன் கொழும்புக்கு மனைவியாருடன் புறப்படத் தயாரானான். பொருள்வசதி இல்லை. உறவினர் உதவிகளும் பெரிதாக இல்லை. பொறுப்புகள் அதிகம், தங்கைக்கு மணமாகவில்லை. தம்பியும் அப்படியே. தந்தை பெரும் பொருளீட்டினும் சிவன் கோயில் திருப்பணியில் முழுவதும் செலவு செய்ததனால் தந்தை சொத்து எதுவும் வைக்கவில்லை. கோவிலை நிர்வகிக்கும் பொறுப்பு வேறே. சாம்பசிவக் குருக்கள், தம்பி இரத்தினகைலாசநாதன் இருவரும் கோவில் பொறுப்புகளைக் கவனிக்க, கைலாசநாதன் திரிபுரசுந்தரி தம்பதியர் தைரிய இலக்மியையே தனித்துணையாகக் கொண்டு மேல் கல்விக்காக கொழும்பு சென்றனர். அங்கு தாய்மாமன் பத்மநாப ஐயருடைய அரவணைப்பில் பல்கலைக்கழகக் கல்வி ஆரம்பமாயிற்று. தானே சில பாடங்களில் வகுப்புக்களை வீடுகளில் நிகழ்த்தி அதில் வரும் வருவாயில் பல்கலைக்கழகத்தில் பயில நினைத்த கைலாசநாதனுக்கு, தாய்மாமனின் அரவணைப்பு பெரிதும் உதவிற்று. கல்வி தொடங்கிற்று. 1947ஆம் ஆண்டு பரீட்சையில் சித்தியாயிற்று. இவ்வேளை லண்டன் பல்கலைக்கழகத்தில் இருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக நியமனம் பெற்ற *Betty Heiman* என்னும் ஜெர்மனிய சமஸ்கிருத நிபுணரின் பெரும் ஆதரவும் அபிமானமும் இருந்தது. பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் நியமனம் கிடைத்தது. கைலாசநாதனின் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்த திரிபுரசுந்தரியின் வாழ்க்கை தனியே வேறாக அமையவில்லை. ஒன்றாயே அமைந்தது. இவ்வாழ்க்கை வரலாறு 60 ஆண்டுகளாகத் தொடரினும் தன் கணவன் வாழ்க்கையினின்றும் வேறாகாததாக இணைந்து வளர்ந்தது. திரிபுரசுந்தரியின் ஜாதக பலத்தினால் கைலாசநாதனின் வாழ்க்கை வளம் பெற்று பேரும் புகழும் வந்தமைந்தது. பெருமை திரிபுரசுந்திரிக்கே. இணைபிரியாது 1940இல் ஆரம்பித்த வாழ்க்கை ஏறக்குறைய 60 ஆண்டுகளாக 2000ஆம் ஆண்டு வரை நீடிக்கவிடாது நான்கு மாதங்கள் முன்னா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே முடிந்துவிட்டது. கைலாசநாதன் வாழ்க்கையே திரிபுரசுந்தரியின் வாழ்க்கை, திரிபுரசுந்தரியின் வாழ்க்கையே கைலாசநாதனின் வாழ்க்கை என்ற நிலை ஏற்பட்டதால் முன் குறிப்பிட்டபடி அவள் வாழ்க்கைச் சிறப்பு கணவன் வாழ்க்கையுடன் ஒன்றி இணைந்து விட்டதை மேலும் வற்புறுத்த வேண்டியிருக்கின்றது.

கணவர், மனைவி இருவர் வாழ்க்கை சம்பவக்குறிப்புகள்
(நெடும்பட்டியல் இடமின்மையால் குறுக்கி அமைக்கப்பட்டது)

1921 கைலாசநாதன் பிறப்பு
1928 திரிபுரசுந்தரி பிறப்பு
1940 லண்டன் மற்றிகுலேஷன் வகுப்பு
விவாகம்
1945 பல்கலைக்கழகக் கல்வி
1947 B. A. பட்டம். உதவி விரிவுரையாளர் பதவி
1948 கமலா மூத்த குழந்தை ஜனனம்
1950 M. A. பட்டம். அம்பி சுப்பிரமணியம் பிறப்பு
1954 மேற்படிப்புக்காக லீவு - சர்வேஸ்வரன் வீட்டில் மாமனார் சாம்பவசிவகுருக்கள், தம்பி இரத்தினகைலாசநாதன் அரவணைப்பில் அம்மா பொறுப்பில் இரு குழந்தைகளை விட்டு விட்டு பூனா பயணம்
1956 யாழ் திரும்பியது. மாலினி பிறந்தது
1958 பேராதனை குடிபுகுந்தது. ஸ்ரீதரன் பிறந்தது
1960 Ph.D. பட்டம். கௌரி பிறப்பு
1972 இந்தியாவில் கல்விச் சுற்றுலா. காஞ்சிப் பெரியவர் தரிசனம்
1974 யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் நியமனம்
1984 முதல் U.K. பயணம்
1986 பல்கலைக்கழக சேவை ஓய்வு
1988 மீண்டும் யாழ் பல்கலைக்கழகத்தில் ஒப்பந்தத்தில் தொடர்ந்து சேவை
கௌரி விவாகம்
திருநெல்வேலி வீட்டில் குருகுல ஆரம்பம்
1990 கௌரி, தியாகராஜா இருவரின் அழைப்பில் கொழும்பில் குருகுல அமைப்பு, வேதாகம ஆராய்ச்சி, சைவ திருக்கோவிற் கிரியை நெறி புத்தக வெளியீடு
1992 ஸ்ரீதரன் விவாகம்
1994 அவுஸ்திரேலியா புறப்பாடு
1996 உலகச் சுற்றுலா. அவுஸ்திரேலியாவில் நிரந்தர வாசம்
1997 அவுஸ்திரேலிய பிரஜா உரிமை
1998 யாழ் பல்கலைக்கழகம் D.Litt பட்டம்
1999 ஐரோப்பிய சுற்றுலா. சுவீடன் பூணூல். சுவிட்சலாந்து பூணூல்
திரிபுரசுந்தரி மறைவு


குறிப்பு:

1955இல் பூனாவில் பல்கலைக்கழக Ph.D. ஆராய்ச்சி, 1972இல் இந்திய சுற்றுலா ஆகியன நிகழும்போது குடும்பத்தைப் பாதுகாத்து யாழ்ப்பாணத்தில் தங்க நேரிட்டதால் பிரிவு. இதைவிட பிரிவே நிகழாது ஒருங்கு வாழ்ந்து தன் வாழ்க்கையே தன் கணவன் வாழ்க்கை எனக் கூறுமளவு கணவன் வாழ்க்கையை வளம்படுத்திய உத்தமி, 1999இல் அம்பிகையின் திருவடி நீழலை அடைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Family Tree




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழும் ப்ரமாதி வருஷம் புரட்டாதி மாதம் 17ஆம் நாள் (04-10-99) அபர தசமி திதியன்று இறைவனடி சேர்ந்த ஸ்ரீமதி திரிபுரசுந்தரி கைலாசநாத குருக்கள் அவர்களின் அபரக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், செய்தியறிந்து அநுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எம்முடன் சேர்ந்து உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்

கணவர்
பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

04.11.99

MEARG PRINT LTD. 0181 810 5577

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org